1984 மார்ச் 22

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கல்லூரி மாணவி ஒருத்தி நெய்வேலியில் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திருவாளர்கள் கு. பா. பழனியப்பன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஜே. ஹேமச் சந்திரன் ஆகியோர் ''கடந்த 26—2—1984 அன்று நெய்வேலி யில் கல்லூரி மாணவி உஷா என்பவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இறந்ததும் போலிசார் சரிவர நடவடிக்கை எடுக்காததால் பொது மக்களிடையே இருக்கும் பீதியும் கலவர முமான சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலு வல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக அவர்கள் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சென்ற பிப்ரவரி மாதக் கடைசியில் கல்லூரிக்குப் படிக்கச் சென்ற உஷா என்ற மாணவியை பலாத்காரமாக கடத்திச் சென்றிருக்கிறார்கள். என்று தெரிகிறது. ஒன்றிரண்டு நாட்கள் கழித்து அந்தப் பெண்ணின் பிணம்தான் கிடைத்திருக்கிறது. அதுகுறித்து போலிசாரிடம், எழுத்துப்பூர் வமான புகார், அந்தப் பெண்ணினுடைய உறவினர்களால் கொடுக் கப்பட்டிருக்கிறது. எனவே இது சம்பந்தமாக தக்க விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புகார் கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நெய்வேலியிலுள்ள போலிஸ் ஸ்டேஷனிலுள்ளவர்கள், முறையாக பதில் சொல்லாது, இதுபோன்று வரக்கூடிய பல்வேறு புகார்களுக்கும், பல்வேறு மனுக்கள் கொடுக்கப்பட்டாலும், கூட, முறையான நடவடிக்கை எடுக்காத நிலையில் இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

இதற்கு மேலும் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், 4 தினங்களுக்கு முன்னால் ஒரு கனவனும் மனைவியும் சேர்ந்து சினிமா பார்த்துவிட்டு வருகின்ற நேரத்தில், சில சமூக விரோதிகள் கணவனை பிடித்து கட்டிவிட்டு, அவனுக்கு எதிரே அவனுடைய மனைவியை கற்பழிப்பு செய்துவிட்டு அந்தப் பெண்ணைப் போட்டு விட்டு போய்விட்டார்கள். பின்னர் அந்தக் கணவனை அடித்து தண் ணீரிலே தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு போய்ப் பார்த்த பிறகு, அவனும் இறந்து கிடக்கிறான். பிறகு போய்ப் போலிஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தாலும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படாத நிலையிலிருக்கிறது. ஆகவே, போலிசாரைப் பொறுத்த மட்டில் புகார் கொடுத்தால் அதிலும் குறிப்பபக இப்படிப்பட்ட புகார் வந்தால்' அவைகளை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காலாகாலத்தில் நடவடிக்கைகள் எடுக்காததின் காரணமாக இப்படிப்பட்ட சமூகவிரோதிகளின் செயல்கள் அந்த வட்டாரதிலே அதிகமாக இருக்கின்றன. ஆகவே, போலிசாருடைய அஜாக்கிரதையின் காரணமாக, லா அண்ட் ஆர்டர் (Law and Order) பிரச்சினை பற்றி விரிவாகப் பேசவேண்டியிருப்பதாலும் போலிசாருடைய நடவடிக்கைப் பற்றி விரிவாகப் பேசவேண்டியிருப்பதாலும் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, செல்வி பீட்ரைஸ் உஷா தாரிக், (வயது 22) தகப்பனார் பெயர் அந்தோணிசாமி, பிளாக்-13 டி. 131, பெரியார் சாலை, நெய்வேலி நகர குடியிருப்பு, என்பவர் சென்னை கிண்டியில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெற்று வந்தார் அவரது தந்தை அந்தோணிசாமி 3 வருடங்களாக துபாயில் இருந்து விட்டு நவம்பர் 1983ல் இந்தியாவிற்கு திரும்பி வந்தார். அவர் துபாயிலிருந்த இடைக்காலத்தில் உஷாவிற்கும் அனந்தபுரத்தைச் சேர்ந்த மகிமைதாசுக்கும் நட்பு ஏற்பட்டு, அதன் தொடர்பாக இருவரும் சென்னையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். இத்திருமணச் செய்தியைக் கேள்வியுற்ற உஷாவின் தந்தை, தனக்கு உடல் நலம் மிகவும் குன்றியிருப்பதாக பொய்யாக தந்தி ஒன்று கொடுத்து பின் உஷா நெய்வேலியிலுள்ள தனது வீட்டிற்கு வந்தபின் அவரைத் திட்டியுள்ளார். நிலைமையை உணர்ந்த உஷா ஆபரணங்களில் தனது பங்கு பற்றிக் கேட்கவே அவரது தந்தை ஆவரை கம்பு கொண்டும் பெல்ட் கொண்டும் தாக்கி சிறு காயங்கள் உண்டுபண்ணி துன்புறுத்தியுள்ளார். இதனால் வெறுப்புற்ற உஷா என்டிரின் விஷ மருந்தை உட்கொண்டுள்ளார். இதன் தொடர்பாக அவர் நெய்வேலி பழுப்பு நிலக்கரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளித்தும் பயனின்றி 26-2-1984 அன்று 1 மணி 45 வினாடி அளவில் மரணம் அடைந்தார்.

அவரது தந்தை கொடுத்த தகவலின் பேரில் நெய்வேலி நகரம் குடியமைப்பு காவல்நிலைய குற்ற எண். 118/84, குற்ற விசரணை முறை சட்டப்பிரிவு 174-இன் கீழ் வழக்கொன்று பதியப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை செய்த பெண் மருத்துவர் இரசாயன பரிசோதனை அறிக்கைக்காக இதுபற்றி தமது கருத்தை தக்க வைத்துள்ளார். இவ்வழக்கில் அந்தோணிசாமி தனது மகள்உஷாவை தமக்கு உடல் நலம் குன்றியுள்ளது என்று பொய்யான தகவல் கொடுத்து வீட்டிற்கு வரவழைத்து கோபத்தால் அவரைத் திட்டியும், தாக்கிய வகையிலும் தனது மகளுக்குத் தீங்கு இழைத்திருக்கிறார் என்று காவல்துறைக்கு

1984 மார்ச் 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இதுவரையில் செய்தி கிடைத்திருக்கிறது. மேலும் இந்த மருத்துவத்துறை அறிக்கையும், இரசாயனப் பரிசோதனையின் அறிக்கையும் வந்ததற்குப் பிறகு, உள்ளபடியே தக்க நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறையினர் ஆயத்தமாக இருக்கிறார்கள். இப்போது அவருடைய தந்தையின்மீதே சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, அவருடைய தாக்குதலினால்தான் இறந்திருக்கக் கூடுமோ என்பதும், இந்த விஷம் அருந்தியதினுடைய தன்மைகள் எல்லாம் வந்தற்குப் பிறகு முழு புலன் விசாரணை முடிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இதுபற்றி மேலும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

அறிக்கை அளித்தல்

விதி 107ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—3—1984 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில், உடுக்குறியிட்ட எண். 273,—பழைய எண். 18626—தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது உறுப்பினர் திரு. மா. வின்செண்ட் அவர்கள் கீழ்க்கண்டவாறு வினாக்களைக் கேட்டிருந்தார்.

விவர அறிக்கையிலே இரண்டாம் நிலையில், படகுத்துறை, சிற்றுண்டிசாலை மாற்றுப்பாதை ஒழுங்குப்படுத்துவது போன்றவைகளுக்காக ரூ. 108 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 141 இலட்சம் செலவிடப்பட்டு இருக்கிறது. படகுத்துறை இப்போது சென்னையில் நடைபெறுகிறதா? அதிலே யார் யார் பயணம் செய்கிறார்கள்? இந்தியர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா? வெளிநாட்டவர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா? இதிலிருந்து அரசுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுத்துறைகள் எல்லாம் ஒன்றும் இப்போது செயல்படவில்லை. எனவே மற்ற கேள்விகளுக்கு இடம் இல்லை. நாம் இப்போது முக்கியமாகச்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS